2. அறிவிப்புகள்

(அ) பேரவை அலுவல்

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர்.........................

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறோம்.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்றைக்கு ஒத்திவைப்புத் தீர்மானம், கவன ஈர்ப்பு, உடுக்குறியிட்ட வினாக்கள் விடைகள் ஆகியவற்றை எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை என்று கட்சித் தலைவர்கள் முடிவு செய்திருக்கிறார்கள். ஒழுங்குப் பிரச்சினை எதையும் நான் இப்போது அனுமதிக்க முடியாது. பேரவையின் இந்தக் கூட்டத் தொடர் இன்றோடு முடிய இருக்கிறது. இன்று 12 மணிக்குள் எல்லாச் சட்டமுன் வடிவுகளையும் முடித்து விடலாம் என்று நினைக்கிறேன். (குறுக்கீடு) அதற்குப் பின்னால் ஒழுங்குப்பிரச்சினை கேட்பதற்கு அனுமதி அளிக்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

(அ). மதிப்பீட்டுக் குழு

திரு. எஸ். ஜெகத்ரட்சகன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மீனளத் துறை பற்றிய மதிப்பீட்டுக் குழு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் குறித்து மேற்படி குழுவின் இருபத்தொன்றாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) அரசினர் உறுதிமொழிக் குழு.

திரு. பி. முகமது இஸ்மாயில் : மாண்புமிகு தலைவரவர்களே, அரசு உறுதிமொழிக் குழுவின் ஐந்தாவது (ஏழாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை அவைக்கு அளிக்கிறேன்.